(3) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

புதுக்கோட்டை காவேரி மில் மூடப்பட்டது குறித்தும், பாதிக்கப் பட்ட தொழிலாளர்களுக்கு இடைக் கால நிவாரணம் அளிப் பதுகுறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து மாண்புமிகு உறுப் பினர்கள் திரு. விஜய ரகுநாத தொண்டமான் அவர்களும், திரு. சித்தன் அவகளும் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கி ருர்கள். அதாவது—

The closure of Keveri Mills Limited at Pudukottai which has affected hundreds of workers and to take steps to open the Mills and in the meanwhile to provide interim relief for the affected workers and their families

என்ற கருத்துக்காக இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைத்து விவாதிக்க வேண்டுமென்று அறிவிக்கை கொடுத்து இருக்கிருர்கள். ஏற்கெனவே, கதவடைப்பு முதலிய நிகழ்ச்சி களுக்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்கத் தேவை யில்லை என்று தீர்ப்பு வழங்கியிருப்பதால் இதற்கும் அனுமதியை மறுக்கின்றேன்.

அடுத்து திரு. கோதண்டராமன், திரு. தனுஷ்கோடி, திரு. பாரதி மோகன் ஆகிய மூவரும் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தை கொடுத்திருக்கிருர்கள். இதை நாளை எடுத்துக்கொள்ளுகின்றேன்.

(4) கவன ஈர்ப்பு

(அ) கைத்தறித் துணித்தேக்கமும் நெசவாளர் அல்லலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை திரு. என்.எஸ்.வி. சித்தன், திரு. ஈ. ஆர். கிருஷ்ணன், திரு. கரு. சிமைச்சாமி ஆகி யோர் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கவனத் திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் உற்பத்தியாகியிருக்கும் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேக்கமாக இருப்பதால் கைத்தறி-நெசவுத் தொழிலில் மந்தமேற்பட்டு அதன் காரணமாக கைத்தறியை நம்பி வாழ்கின்ற பல லட்சக்கணக்கான நெசவாளர் கள் குடும்பங்கள் வேலையில்லாமல் கஷ்டப்படுகின்ற நிலையைப்பற்றி அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி--தொழில் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையிலும், தனியார் துறையிலும் உற்பத்தியாகி யிருக்கும் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் விற்பனையாகாமல் தேக்கமாக இருப்பதால் கைத்தறி